***DEPOSITION OF WITNESSES***
***(Chapter XXIII code of Criminal Procedure)***
***IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C.COURT, PUDUKKOTTAI***
***C.C. NO: 91/2017***
***Deposition of Witness for PW 1***

| | | |
|---|---|---|
| Name | : திரு.  கோட்டைசாமி | Caste: |
| Father's name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 26.09.2019.

**<u>மு.வி.</u>**

நான் தற்போது ராஜபாளையம் போக்குவரத்து பிரிவில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணி புரிகிறேன். கடந்த 28.10.2015ம் தேதி ராஜபாளையம் தெற்கு காவல் நிலையத்தில் த.கா. பணியாற்றிய போது, நானும் காவலா் 360 சுரேஷ்குமாா் என்பவரும் சாா்பு ஆய்வாளா் திரு. அசோக்குமாா் அவா்களுடன் ராஜபாளையம் தெற்கு காவல் நிலையப்பகுதியில் குற்றத்தடுப்பு மற்றும் போதை பொருள் தடுப்பு சம்மந்தமாக ரோந்து பணியில் ஈடுபட்ட போது, ராஜபாளையம் மங்காபுரம் 40 வீட்டு பகுதியில் சந்தேகப்படும்படியாக நின்று கொண்டியருந்த சுமாா் 47 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவா் ஓட முயற்றவரை போலீஸ் பாா்ட்டியாக நாங்கள் சுற்றி வளைத்து பிடித்து விசாரித்த போது, அவா் ராஜபாளையம் மங்காபுரம் 40 வீட்டு பகுதியை சோ்ந்த சுந்தரம் மகன் சதுரகிரி என்று தெரியவந்தது.  மேற்படி நபரிடம் கஞ்சா வைத்திருப்பதாக நம்பதகுந்த தகவல் உள்ளது என்றும், தங்களை அரசு பதிவு பெற்ற அலுவலரிடம் சோதனை அழைத்து செல்லலாமா என்று கேட்டதற்கு, அவா் தாங்களே சோதனை செய்யலாம் என்று சொன்னதால் சம்மதக்கடிதம் பெறப்பட்டது.  பின்னா் அவா் கையில் வைத்திருந்த மஞ்சள் நிற துணிப்பையில் வைத்திருந்த கஞ்சாவை எடுத்து ஆஜா் படுத்தினாா். நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பாா்த்ததில் 1.100 கி.கி. கஞ்சா இருந்தது. அதை சாா்பு ஆய்வாளா் அத்தாட்சியில் கைப்பற்றினாா். அதில் 100 கிராமை இரசாயண பரிசோதனைக்காக மாதிரி எடுத்து காக்கி பேப்பரில் வைத்து மடித்து சீல் வைத்தோம். மீதமுள்ள 1.000 கி.கி.-ஐ காக்கி பேப்பரில் வைத்து மடித்து சீல் வைத்தோம். அத்தாட்சியில் பொது மக்கள் யாரும் சாட்சி கையொப்பம் செய்ய முன்வராததால் அதில் நானும் காவலா் சுரேஷ்குமாா் அவா்களும் சாட்சியாக கையொப்பம் போட்டோம். எதிரியை சாா்பு ஆய்வாளா் கைது செய்து, எதிரி மற்றும்...

...2

சொத்துக்களுடன் நிலையம் கொண்டுவர சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். வழக்கு சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**கு.வி.:**

28.10.2015ம் தேதி சார்பு ஆய்வாளர் என்னை சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார். எத்தனை மணி என்று ஞாபகம் இல்லை. காவல் நிலையத்திற்கு போவதற்கு முன்பே என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துவிட்டார். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்த போது, வேறு யாரையும் விசாரித்தாரா என்று தெரியாது. விசாரித்த பிறகு எதிரியை அழைத்துக்கொண்டு காவல் நிலையம் போனோம். 28.10.2015ம் தேதி 14.30 மணியில் இருந்து 15.00 மணிக்குள் அத்தாட்சி தயார் செய்தோர். நான் 14.45 மணிக்கு கையொப்பம் போட்டேன். என்னிடம் காட்டப்படும் எதிரிக்கு வழங்கிய அத்தாட்சி நகல் மற்றும் வழக்கு நாட்குறிப்பில் உள்ள அத்தாட்சியில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அதில் நான் 11.11.2015 தேதி கையொப்பம் செய்ததாக உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அத்தாட்சி மற்றும் அதில் உள்ள கையொப்பத்தை வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு நாட்குறிப்பில் உள்ள அத்தாட்சியும் தவறு என்று சொன்னால் சரியல்ல. எதிரி கஞ்சா வைத்திருப்பதாக எனக்கு தகவல் வரவில்லை, சார்பு ஆய்வாளருக்கு தகவல் வந்தது. அந்த தகவல் வந்த விவரத்தை என்னிடம் சொல்லவில்லை. சம்பவ இடம் தென்காசியில் இருந்து பச்சைமடம் போகும் வழியில் உள்ளது. அந்த ரோட்டில் அருகில் ராஜபாளையம் அனைத்து மகளிர் காவல் நிலையம் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் சொல்லுவது போல சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றும், அவரிடம் இருந்து கஞ்சா எதுவும் கைப்பற்றவில்லை என்றும், அத்தாட்சி எதுவும் தயார் செய்யவில்லை என்றும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரி கஞ்சா வைத்திருந்தாக இவ்வழக்கை ஜோடித்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரி சோதனை சம்மத கடிதம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் அவரை காவல் நிலையத்தில் வைத்து கட்டாயப்படுத்தி சம்மத கடிதத்தில் கையொப்பம் வாங்கியுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. கஞ்சா வைத்திருந்த பையை மகஜரில் கைப்பற்றினோம். எதிரி எந்த குற்ற செயலும் செய்யவில்லை என்றும், அவர் மீது பொய்யாக வழக்கு போட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

**ம.வி.**

எதிரி மீது எங்கள் காவல் நிலையத்தில் பல்வேறு கஞ்சா வழக்கு உள்ளது.

**ம.கு.வி.**

அந்த வழக்குகளின் குற்ற எண் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த வழக்குகள் விவரம் பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொல்லுவது போல எந்த வழக்குகளும் கிடையாது என்றும் அதனால் தான் அந்த வழக்குகளின் விவரத்தை சொல்ல முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**Taken down by me in open court read over to the witnesses and admitted by him/her to be correct.**

**Addl. District Judge/Presiding Officer,**
**Spl.Court for EC/NDPS Act case, Pudukkottai.**

*DEPOSITION OF WITNESSES*
*(Chapter XXIII code of Criminal Procedure)*
*IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C.COURT, PUDUKKOTTAI*
*C.C. NO: 91/2017*
*Deposition of Witness for PW 2*

| | |
|---|---|
| Name : திரு. சுரேஷ்குமார் | Caste: |
| Father's name : | Calling: |
| Village : | Religion: |
| Taluk : | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 26.09.2019.

**மு.வி.**

நான் தற்சமயம் விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் வடக்கு காவல் நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணி புரிந்து வருகிறேன். ராஜபாளையம் தெற்கு காவல் நிலையத்தில் பணி புரிந்த போது 28.10.2015ம் தேதி 13.00 மணிக்கு நானும் த.கா. 2362 கோட்டியப்ப சாமி என்பவரும் சார்பு ஆய்வாளர் திரு. அசோக் குமார் என்பவரும் குற்ற தடுப்பு மற்றும் போதை பொருள் தடுப்பு சம்மந்தமாக சரக எல்லைக்குள் ரோந்து செல்லும் போது, மங்காபுரம் 40 வீடு மாட்டு தொழுவம் அருகில் சந்தேகத்திற்கிடமாக 47 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் ஓட முயற்சி செய்தவரை பிடித்து விசாரணை செய்ததில் அவர் மங்காபுரம் 40 வீடு சுந்தரம் மகன் சதுரகிரி என்று தெரிய வந்தது. அவர் கஞ்சா வைத்திருப்பதாக நம்பதகுந்த தகவலின் அடிப்படையில் அவரை சோதனை செய்ய அரசு பதிவு பெற்ற அலுவலர் முன்பு அழைத்து செல்லவா என்று கேட்டதற்கு தாங்களே சோதனை செய்யலாம் என்று கூறியதன் அடிப்படையில் அவரிடம் சோதனை கடிதம் பெற்றோம். அவர் தன்னிடம் இருந்த மஞ்சள் நிற துணிப்பையில் கஞ்சா 1.100 கிகி. எடுத்து ஆஜர்ப்படுத்தினார். அதை சார்பு ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அதில் சார்பு ஆய்வாளர் மாதிரிக்காக 100 கிராம் கஞ்சாவை தனியாக காக்கி பேப்பரில் மடித்து சீல் வைத்தார். பாக்கி கஞ்சாவை தனியாக காக்கி பேப்பரில் மடித்து சீல் வைத்தார். அத்தாட்சியில் பொதுமக்கள் யாரும் சாட்சியாக கையொப்பம் செய்ய முன்வராததால் நானும் த.கா. கோட்டியப்பசாமியும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். கைப்பற்றிய கஞ்சாவை நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு அளவை தெரிந்து கொண்டோம். பின்னர் எதிரியையும் சொத்தையும் நிலையம் கொண்டு செல்ல சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். வழக்கு சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

...2

**கு.வி.:**

நான் கையொப்பம் செய்த அத்தாட்சியில் முதல் சாட்சியாக கோட்டியப்பசாமி கையொப்பம் செய்து இருந்தார். என்னிடம் காட்டப்படும் எதிரிக்கு வழங்கிய அத்தாட்சி நகலில் நானும் கோட்டியப்பசாமியும் சாட்சியாக கையொப்பம் செய்து அதில் கோட்டியப்பசாமி 11.11.2015 என்று எழுதியுள்ளார். என்னை விசாரித்த போது சார்பு ஆய்வாளர் கோட்டியப்பசாமியையும் விசாரித்தார். எவ்வளவு நேரம் இடைவெளியில் எங்கள் இருவரையும் விசாரித்தார் என்று ஞாபகம் இல்லை. இரண்டு பேரையும் ஒரே இடத்தில் வைத்து விசாரிக்கவில்லை. எதிரி நின்றிருந்த இடத்தில் தான் அவரது வீடு உள்ளதா என்றால் அது பற்றி தெரியாது. அவர் நின்றிருந்த ரோட்டின் அருகில் அனைத்து மகளிர் காவல் நிலையம் உள்ளது. இரண்டிற்கும் இடைப்பட்ட தூரம் 50 மீட்டர் இருக்கும். அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் இருந்து 50 மீட்டாரில் எதிரி வீடு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சார்பு ஆய்வாளருக்கு ரகசிய தகவல் எத்தனை மணிக்கு வந்தது என்று எனக்கு தெரியாது, ஆனால் 13.00 மணிக்கு நாங்கள் காவல் நிலையத்தில் இருந்து ரோந்திற்கு கிளம்பினோம். காவல் நிலையத்தில் இருந்து சம்பவ இடம் 2 கி.மீ. தூரம் இருக்கும். எவ்வளவு நேரத்தில் சம்பவ இடம் சென்றோம் என்றால் ஞாபகம் இல்லை. இடையில் எங்கு எங்கு போனோம் என்றால் ஞாபகம் இல்லை. நான் சொல்லுவது போல, சொன்ன தேதியில் எதிரியை கைது செய்யவில்லை என்றும், அவரிடம் சம்மத கடிதம் பெறவில்லை என்றும், கஞ்சா எதுவும் கைப்பற்றவில்லை என்றும், அத்தாட்சி தயார் செய்யவில்லை என்றும் புள்ளியியல் கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக வழக்கு போட்டு, அவரிடம் காவல் நிலையத்தில் வைத்து கட்டாயப்படுத்தி கையொப்பம் பெற்று ஆவணம் தயார் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரி எந்த குற்ற செயலும் செய்யவில்லை என்றும் மேல் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**Taken down by me in open court**
**read over to the witnesses and**
**admitted by him/her to be correct.**

**Addl. District Judge/Presiding Officer,**
**Spl.Court for EC/NDPS Act case, Pudukkottai.**